Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 202/2021
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.08 , Page.No.42/23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கணேசன் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. மணி | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 35 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 19th day of June 2026.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.8 திரு. கணேசன் முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2021 தேதி மாலை 19.00 மணிக்கு திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மங்கையகரசி என்பவர் நிலையம் சேர்ந்து புகார் மற்றும் 5 1/2 சவரன் தங்க நகை மற்றும் TN 33 BC 2021 கருப்பு நிற பல்சர் மற்றும் இவ்வழக்கு எதிரிகளையும் உடன் கொண்டுவந்து கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 61/2021 இதச பிரிவு 392 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 06 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) பின்னர் அன்றை தினத்தில் 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் கிஷஆனாந்த் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். ( **அவை முறையே அ.சா.ஆ. 07, 08 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**) அன்றை தினம் சாட்சிகள் மங்கையகரசி, ஆறுமுகம், கிஷ்ஆனாந்த் , செல்வநாதன், அருண்குமார், சிவகணேஷ், யுவராஜ், வெங்கடேசன், அபிஷேக், ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவர 23.00 மணிக்கு காவல் நிலையம் வந்து காவல் நிலையத்தில் இருந்த எதிரிகளை காரணம் கூறி கைது செய்து அவர் தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் ராஜீவ் காந்தி, ஸ்ரீராமன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளை விசாரித்தேன். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எனது புலன் விசாரணையை முடித்து மேல்விசாரணைக்கு காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பல்சர் வாகனம் யாருடையது என்றும் அது எவ்வாறு எதிரிகளிடம் சென்றது என்றும் விசாரித்தேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் முழுவதுமாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை. சம்பவம் நடந்த பின்பு யாரும் தகவல் அளிக்கவில்லை என்றாலும் புகார்தாரர் காவல் நிலையம் வந்த பின்பு தான் சம்பவத்தை பற்றி எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் பாச்சல் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் என்றால் சரியல்ல. அவர்கள் திருப்பத்தூர் நகர கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகும். 25.03.2021 அன்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யப்பட்டது. எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பும் போது மேற்படி ஆவணங்கள் அனுப்பவில்லை என்றாலும் காலதாமதமாக அனுப்பபட்டது என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அரசு பணியாளர்கள் என்றாலும் நான் தனிப்பட்ட சாட்சிகளை வேண்டுமென்றே விசாரிக்க வில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நாங்கள் காவல் நிலைய்தில் வைத்து தயார் செய்தோம் என்றாலும் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Judicial Magistrate No.1 Thirupattur

**நீதித்துறை நடுவர் எண்.1**

**திருப்பத்தூர்**

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 202/2021
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 07 , Page.No.42/23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அபிஷேக் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கிருஷ்ணமூர்த்தி | தொழில் | மாணவர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 31 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 19th day of June 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.07 திரு.அபிஷேக் முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் படித்து வருகிறேன். அ.சா.1 என் தாயார். கடந்த 25.03.2021 அன்று மாலை 05.15 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது என் தாயார் எனக்கு போன் செய்து அவர் பேருந்து நிலயத்தல் இருந்து வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்த போது இரண்டு நபர்கள் தனது தங்க சங்கிலியை பிடுங்கிவிட்டு சென்றதாக தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள். அப்போது தங்க சங்கிலியை பிடுங்கிய இரண்டு நபர்களில் வாகனம் ஓட்டிய நபரை மட்டும் பொதுமக்கள் பிடித்து வைத்திருந்தார்கள். மற்றொரு எதிரி சுமார் 150 மீட்டர் தொலைவில் ஓளிந்துகொண்டிருந்தவரையும் பொதுமக்கள் துரத்தி பிடித்தனர். பின்பு

போலீசாரும் அங்கு வந்தார்கள். பின்பு எதிரிகளை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார் தாரர் என் தாயார் என்பதால் நான் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**// உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Judicial Magistrate No.1 Thirupattur

**நீதித்துறை நடுவர் எண்.1**

**திருப்பத்தூர்**